செய்தி வெளியீடு எண்: 249 நாள்:12.04.11.

# இராமேஸ்வரத்தில் கடலில் மீன்பிடிக்கச் சென்று ஊர் திரும்பாத நான்கு மீனவர் குடும்பங்களுக்கு 20 இலட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்கி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை!

2–4–2011 அன்று இராமேஸ்வரத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற திரு.விக்டர்ஸ், திரு.மாரிமுத்து, திரு.அந்தோணிராஜ் மற்றும் திரு.ஜான்பால் ஆகிய நான்கு மீனவர்கள் ஊர் திரும்பாததால், தமிழக அரசு, இந்தியக் கடலோர காவல் படையினரின் துணையுடன் கடலில் அம்மீனவர்களைத் தேடும் பணியினை மேற்கொண்டது.

இந்நிலையில், 6–4–2011 அன்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்து அழுகிய நிலையில் உள்ள ஒரு உடல் இலங்கையில் டெல்ப் தீவு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தகவல் வந்தது. 9–4–2011 அன்று மீனவர்களின் உறவினர்கள் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, இறந்த அந்த மீனவரின் உடல் அடையாளம் காணப்பட்டதுடன், அவ்விடத்திலேயே இறுதிச் சடங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.

மீன்பிடிக்கச் சென்று 10 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டதாலும், அதில் ஒரு மீனவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாலும், மீதமுள்ள மூன்று மீனவர்கள் இதுவரை திரும்பி வராத நிலையில்; ஏற்கனவே இதுபோன்ற நிகழ்வுகளில் நிவாரண நிதி வழங்கப்பட்டதை முன்மாதிரியாகக் கொண்டு; இந்த நான்கு மீனவர்களின் குடும்பத்தினருக்கும், தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 20 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியுதவி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (12.4.2011) ஆணையிட்டுள்ளார்கள்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.